# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1961/7 - 2016 අප්‍රේල් මස 05 වැනි අඟහරුවාදා - 2016.04.05

1961/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரி அறிவித்தல்

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015.12. 15 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்பட்ட 2015.12.15 ஆந் திகதிய 1945/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதி 2016.03.10 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, ஏப்பிறல் 4.

கட்டளை

2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 902 ஆம் இலக்க அறிவித்தல் இவ்வொழுங்கு விதி மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

(1) அதில் அறிவித்தலுக்கு கீழ் காட்டப்பட்டுள்ள 1 அட்டவணையினை உள்ளடக்குவதன் மூலம் :-

**அட்டவணை I**

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| | **உரிமத்தின் வகை** | **வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா** | **பிணைப் பொறுப்பு/ வைப்பு (ரூபா)** |
| 1. | வடிசாலைகளுக்கான உரிமம் | | |
| | (i) வடிசாலைகளுக்கான உரிமம் (பனஞ்சாராயம் தவிர்ந்த) | 100,000,000 | 25,000 |
| | (ii) வடிசாலைகளுக்கான உரிமம் (பனஞ்சாராயம்) | 250,000 | 25,000 |
| 2. | சாராயம் /பியர்/வெளிநாட்டு மதுபானம் உற்பத்தியாளரின் மொத்த விற்பனை நிலையம் | 1,000,000 | 50,000 |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| | **உரிமத்தின் வகை** | **வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா** | **பிணைப் பொறுப்பு/ வைப்பு ரூபா** |
| 3. | கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கான உரிமம் | 1,000,000 | - |
| 4. | வினாகிரி உற்பத்தியிடத்திற்கான உரிமம் | 500,000 | - |
| 5. | மதுபான மொத்த விற்பனைக்கான உரிமம் (எப். எல்./3) | 1,000,000 | 50,000 (சாராயத்திற்கு மட்டும்) |
| 6. | மதுபான சில்லறை விற்பனைக்கான உரிமம் (எப். எல்/4) | | |
| | I. மாநகர சபை இடப்பரப்பு | 600,000 | 25,000 |
| | II. நகர சபை இடப்பரப்பு | 400,000 | 25,000 |
| | III. ஏனைய சபை இடப்பரப்பு | 300,000 | 25,000 |
| | IV. விண்ணப்பதாரர் கம்பனி அல்லது அதன் தாய்த் தொழில்/ கம்பனி என்பவற்றின் வருடாந்த மொத்த புரள்வு ரூபா 72 மில்லியனுக்கு மேற்படுகின்ற வியாபாரம் நடைபெறும் பல் சரக்கு கடைகள் மற்றும் அதியுயர்ந்த வர்த்தக நிலையங் கள் என்பவற்றுக்காக வழங்கப்படும் உரிமம் | 1,000,000 | 25,000 |
| 7. | ஹோட்டல்களுக்கான உரிமம் (எப். எல்/7) சுற்றுலா சபையால் அனுமதிக்கப்பட்டது மற்றும் சுற்றுலா சபையின் அங்கீகாரத்தைப் பெறாத ஹோட்டல்கள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | | |
| | I. 200 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 1,000,000 | 25,000 |
| | II. 20 தொடக்கம் 199 வரையான அறைகள் | 500,000 | 25,000 |
| | III. 20 ற்குக் கீழ்ப்பட்ட அறைகள் | 300,000 | 25,000 |
| 8. | ஹோட்டல் மதுச்சாலைக்கான உரிமம் (எப். எல்/8) | 100,000 | - |
| 9. | விற்பனை நேரங்கள் நீடிப்பதற்கான குறை நிரப்பு உரிமம் (வார மொன்றிற்கு) (எப். எல்/15) | 75,000 | - |
| 10. | உணவுச்சாலைகளுக்கான உரிமம் (சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்றவை/ அங்கீகாரத்தைப் பெறாதவை) (எப். எல்/11) | 600,000 | 25,000 |
| 11. | கழகங்கள், சமூக பொழுது போக்கு விளையாட்டுக் கழகங்கள் (அங்கத்தவர் மட்டும்) (எப். எல்/13அ) | 600,000 | 25,000 |
| 12. | தனியாருக்கு உரித்தான கழக உரிமம் (எப். எல்.13) | 800,000 | 25,000 |
| 13. | வாடி வீட்டிற்கான உரிமம் (எப். எல்/12) | 300,000 | 25,000 |
| 14. | சினிமா கொட்டகைகளுக்கான களியாட்ட மதுபான சாலைகளுக்கான உரிமம் (எப். எல்/9) | 300,000 | 25,000 |
| 15. | I. பியர், ஏல், ஸ்டவுட், வைன் விற்பதற்கான விசேட உரிமம் (சில்லறை உரிமம்) (எப். எல். 22அ) | 100,000 | 25,000 |
| | II. விற்பனை நிலையத்தில் நுகர்வதற்கு அனுமதிக்கப்பட்டவை (எப். எல். / 22ஆ) (சுற்றுலா சபையால் அனுமதிக்கப்பட்ட/ அனுமதிக்கப்படாத நிலையங்கள்) | 150,000 | 25,000 |
| 16. | தோட்ட சிற்றுண்டிச் சாலைகள் | 100,000 | 25,000 |
| 17. | கள்ளைச் சேகரிக்கும் நிலையத்திற்கான உரிமம் | 100,000 | - |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | | *நிரல் II* | |
|---|---|---|---|
| | ***உரிமத்தின் வகை*** | ***வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா*** | ***பிணைப் பொறுப்பு/ வைப்பு ரூபா*** |
| *18.* | புகையிரத உணவுச்சாலை (எப். எல்/10) | 50,000 | 25,000 |
| *19.* | செறிவு கூடிய மதுசாரத்தை விற்பதற்கான உரிமம் (எப். எல்/17)/ ஈதைல் மதுசாரம் விற்பனை | 50,000 | 25,000 |
| *20.* | போத்தலில் அடைப்பதற்கான உரிமம் | 50,000 | - |
| *21.* | களஞ்சியசாலைகளுக்கும் குதங்களுக்குமான உரிமம் | 50,000 | - |
| *22.* | விசேட சந்தர்ப்பத்திற்கான உரிமம் (ஒரு நாளைக்கு) (எப். எல்/ 14) | 50,000 | - |
| *23.* | ஏலத்தில் விடுபவர்களுக்கான உரிமம் (ஒரு நாளைக்கு) (எப். எல்./16) | 50,000 | - |
| *24.* | குடிக்க தக்கவியலாத வெறிய மதுசாரங்களை இறக்குமதி செய்வதற்கும் உடைமையில் வைத்திருப்பதற்குமான உரிமம் | 50,000 | - |
| *25.* | போத்தலில் அடைக்கப்பட்ட பால் பன்ச் (பால் மற்றும் திராட்சை மதுவினாலான பானம்) அல்லது வைன்களை உற்பத்தி செய்து விற்பதற்கான உரிமம் | 5,000 | - |
| *26.* | வடிகட்டல் தவிர்ந்த ஏனைய செயன்முறைகளால் உற்பத்தி செய்யப்பட்ட கன அளவில் 4% இற்கு மேற்படாத மதுசாரத்தைக் கொண்ட கிளையில்லாத மரங்களிலிருந்து அல்லது ஏதேனும் வேறு தாவரங்களிலிருந்து பெறப்பட்ட மதுபானத்தின் தயாரிப்பும் போத்தலில் அடைப்பும் விற்பனவுக்குமான உரிமம் | 5,000 | - |
| *27.* | கிளையில்லாத மரங்களிலிருந்து அல்லது ஏனைய தாவரங்களிலிருந்து இயற்கை உற்பத்தியிலிருந்து வடிகட்டல் தவிர்ந்த ஏனைய செயன் முறைகளால் உற்பத்தி செய்யப்பட்டதும், கன அளவில் 4% இற்கு மேற்பட்ட மதுசாரத்தைக் கொண்டதும், கள்ளு அல்லது தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட வேறு மதுபானங்கள் தவிர்ந்த மதுபானங்களை உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 5,000 | - |
| *28.* | “டீசைடர்” மதுபானம் உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 5,000 | - |
| *29.* | மருந்தூட்டப்பட்ட வைன்கள் விற்பனைக்கான உரிமம் (எப். எல்/18) | 5,000 | - |
| *30.* | வைன் ஸ்பிரித்து விற்பனை | 5,000 | - |

| ***இல.*** | ***உரிமத்தின் இயல்பு அல்லது விபரம்*** | ***உரிமக் கட்டணம்*** |
|---|---|---|
| *31.* | பதனிடப்பட்ட சாராயத்தை உற்பத்தி செய்து மொத்த அடிப்படையில் விற்பனை செய்வது அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற் கான உரிமம். | 50,000,000 ரூபா ( ரூபா ஐம்பது மில்லியன் ) |
| *32.* | மொலாசில், கருப்பஞ் சாராயத்தை உற்பத்தி செய்து மொத்தமாக விற்பனை செய்வதற்கு அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம். | |
| *33.* | விசேட சாராயத்தை மொத்த அடிப்படையில் செய்து விற்பதற்கான அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை செய்யும் நிலையங்களுக்கு வழங்கு வதற்கான உரிமம். | |
| *34.* | தென்னம் சாராயத்தை மொத்தமாக உற்பத்தி செய்து விற்பதற்கான அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை செய்யும் நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | |
| *35.* | உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான விற்பனை மற்றும் தயாரிப்பு என்பனவற்றுக்காக மொத்த விற்பனை நிலையங்களுக்கு மொத்தமாகவும் அல்லது தயாரிப்பாளர் களுக்கு விநியோகிப்பதற்கான உரிமம் | |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| | **உரிமத்தின் இயல்பு அல்லது விபரம்** | **உரிமக் கட்டணம்** |
|---|---|---|
| 36. | தானியத்திலிருந்து மொத்தமாக உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் மற்றும் மொத்த விற்பனை செய்யும் நிலையத்திற்கு வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உரிமம் | ரூபா 50,000,000<br>( ரூபா ஐம்பது மில்லியன் ) |
| 37. | மொத்த விற்பனை மூலம் பனஞ் சாராயத்தினை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் அல்லது மொத்த விற்பனை நிலையத்திற்கு உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதல் என்பவற்றிக்கான உரிமம் | ரூபா 500,000<br>( ரூபா ஐந்து இலட்சம் ) |

(2) அவ்வறிவித்தலின் அட்டவணை III இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) பந்தி 5 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதினை இடுக :-

"5. புதிய உரிமத்திற்கு அல்லது உரிமத்தினை மீள் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கும் போது, மீளப்பெற முடியாத கட்டணமாக ரூபா பத்தாயிரம் (ரூபா 10,000) செலுத்தப்படுதல் வேண்டும்" ;

(ஆ) பந்தி 6 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக :-

"6. ஒவ்வொரு உரிமமும் ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கு வலிதாக்கப்படுதல் வேண்டும். எவ்வுரிமம் ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கப்படுகின்றதோ அவ்வுரிமம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கு வழங்கப்படுதல் வேண்டும்."

(இ) பந்தி 7 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக :-

"7. மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள உரிமக் கட்டணத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டணமானது ஆண்டொன்றின் பாகமாக வழங்கப்பட்ட புதிய உரிமம் எனும் விடயத்தில், விகிதாசார அடிப்படையில் அறவிடப்படுதல் வேண்டும். கொடுப்பனவானது இயைபான நிதி ஆண்டின் தொடக்க திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு வேலை நாட்களுக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிதி ஆண்டின் தொடக்கத்தின் பின்னர் ஆகக் குறைந்தது ஏழு வேலை நாட்களில் கட்டணமானது இயைபான பிரதேச செயலாளரினால் கிடைக்கப் பெறாவிடின், மேலதிக காலப்பகுதியொன்றாக நான்கு கிழமைகள் எனும் காலப்பகுதியானது உரிமக் கட்டணத்தின் பெறுமதியின் 1% இனை தண்டத்திற்கமைந்த கொடுப்பனவு ஒன்றாக செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். நான்கு கிழமைகள் எனும் காலப்பகுதியின் பின்னர் தண்டமானது உரிமக் கட்டணத்தின் 3 % ஆக இருத்தல் வேண்டும்.

(ஈ) பந்தி 27 இல் "7,500 ரூபா எனும் சொற்களையும் எண்களையும் விட்டுவிட்டு அதற்குப் பதிலாக "10,000 ரூபா" இனை பதிலீடு செய்வதன் மூலமும் ;

(உ) பந்தி 28 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதினை இடுக :-

"28. உரிமத்தினை கைமாற்றுவதற்கான கட்டணம் ரூபா 10,000 இருத்தல் வேண்டும்."

(ஊ) பந்தி 29 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதினை இடுக :-

"29. கை மாற்றுனரின் சட்டவாரிசாக கை மாற்றம் பெறுநர் இராவிடின், உரிமத்தினைக் கைமாற்றுவதற்கான புதிய விண்ணப்பமானது பின்வருவனவாதல் வேண்டும்." :-

(அ) எப். எல். 4 வகையான மதுபானத்திற்கான உரிமம் ரூபா 15,000,000 இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏனைய வேறுவகை மதுபானத்திற்கான உரிமம் 1,500,000 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

4- 805/1

---

## மதுவரி அறிவித்தல்

காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2010, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 1680/24 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 926 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 1901/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 974 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் என்பன 2015.12. 15 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்வதற்கு விதிக்கப்பட்ட கட்டளை (2015 திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 1945/17 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 984 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல்) 2016.03.10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றது.

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, ஏப்பிறல் 04.

4- 805/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.